கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுஉடையது இல். குறள் 1021

# காலிங்கராயன்
# தின விழா



**நாள் : தை மாதம் 5-ம் தேதி**
**(19.01.2016) செவ்வாய்க்கிழமை**
**காலை 6.00 மணி**
**காளிகாட்டுகளம், பஞ்சலிங்கபுரம்.**

அன்புடையீர்,

வரும் தை மாதம் 5-ம் தேதி (19.01.2016) செவ்வாய்க்கிழமை, நமது முன்னோர் தெய்வத்திருவாளர் **"லிங்கையன் (எ) காலிங்கராயன்"** அவர்கள் சுமார் 750 ஆண்டுகளுக்கு முன்பு நமது பகுதிக்கு (பவானி முதல் கொடுமுடி வரை) வாழ்வாதாரம் கிடைக்கும் பொருட்டு வாய்க்கால் அமைத்து தண்ணீர் திறந்த நினைவு நன்னாள்.

அன்று காலை 6.00 மணியளவில் "அண்ணாரை" நினைவு கூர்ந்து நன்றி செலுத்தும் பொருட்டு, பஞ்சலிங்கபுரம், காளிகாட்டுகளம் அருகில், பொங்கல் வைத்து வழிபாடு செய்யவும், வாய்க்காலில் முளைப்பாரி விட்டு நன்றி செலுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் அன்னாரின் பொள்ளாச்சி மற்றும் கோவையில் உள்ள குடும்பத்தார்கள் இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பு சேர்க்க உள்ளார்கள்.

விழாவில் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு, நமக்கெல்லாம் வாழ்வு தந்து கொண்டிருக்கும் காலிங்கராயன் வாய்க்காலையும், அதை அமைத்துக் கொடுத்த **லிங்கையன்** என்கிற **காலிங்கராயனை** வணங்குவோம்.

முளைப்பாரி போடுதல்:
**மார்கழி 19, (4.1.2016) திங்கள் - காலை 6.30 to 7.30 மணி**

இங்ஙனம்,

**பஞ்சலிங்கம் உழவர் மன்றம்,**
**பஞ்சலிங்கம் தோட்டக்கலை மஞ்சள் சாகுபடியாளர் குழு,**
மற்றும் **ஊர்பொதுமக்கள், பஞ்சலிங்கபுரம், மொடக்குறிச்சி.**

தொடர்புக்கு : **99424 15427, 73738 56610**

நியூ ஆப்செட், ஈரோடு. செல் : 97882 92121, 90922 57579

# காலிங்கராயன் தாலாட்டு

ஆரிராரிராரோ ஆரிராரிராரோ
ஆரிராரிராரோ ஆரிராரிராரோ



பவானி ஆற்றினிலே
பாங்காக அணையைக்கட்டி

பாம்பென நெளியவே
வாய்க்காலைத் தூரவெட்டி

பஞ்சம் தீர்த்தவனின்
பெரும்புகழைப் பாடேண்டி !
பூமி குளிர்ந்ததடி !
பொன்மஞ்சள் விளைந்ததடி !

காலிங்கராயன் மண்ணு – இதைக்
கருத்தில் கொள்ளணும் கண்ணு !
மன்னன் காலிங்கராயன் மண்ணு – இதைக்
கருத்தில் கொள்ளணும் கண்ணு !

– கி. தமிழரசன்,
அறச்சலூர்